**TNVR020028782025**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, திருவில்லிபுத்தூர்.

**முன்னிலை – செல்வி.தி.சுபாஷினி., B.Com., L.L.B (Hons)., L.L.M.,**

நீதித்துறை நடுவர் எண்.II, திருவில்லிபுத்தூர்.

2026-ஆம் ஆண்டு ஜீலை மாதம் 09-ஆம் நாள் வியாழக்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.1030/2025**

| | | |
|---|---|---|
| குற்றமுறையிடுபவர் | | அரசுக்காக:–<br>காவல் சார்பு ஆய்வாளர்,<br>மம்சாபுரம் காவல் நிலையம்,<br>குற்ற எண்.99/2025 |
| குற்றம்சாட்டப்பட்டவர்களின் பெயர்கள் | | செல்வராஜ், (25/25),<br>த/பெ.அழகு,<br>டெபை காந்தி நாடார் தெரு,<br>மம்சாபுரம். |
| சம்பவம் நடந்த நாள் | | 11.05.2025 |
| புகார் கொடுக்கப்பட்ட நாள் | | 11.05.2025 |
| எதிரி கைதான நாள்<br><br>எதிரி பிணையில் சென்ற நாள் | | 11.05.2025 அன்றே காவல் நிலைய பிணையில் சென்றுள்ளார். |
| அரசு தரப்பு விசாரணை முடிவுற்ற நாள்<br><br>எதிரி தரப்பு விசாரணை முடிவுற்ற நாள் | –<br><br>– | 24.06.2026<br><br>இல்லை |
| எதிரி மீது குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | – | 24.02.2026 |
| குற்றம் | | |
| 1. சாட்டப்பட்டது | – | எதிரி மீது பிரிவு 4(1)(C) TNP Amendment Act 2024–ன் கீழ் |

| | | |
|---|---|---|
| 2. வனையப்பட்டது | – | எதிரி மீது பிரிவு 4(1)(C) TNP Amendment Act 2024–ன் கீழ் |
| காலதாமதத்திற்கான காரணம் | – | சாட்சி விசாரணைக்காக தாமதம் |
| அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை பற்றிய விவரங்கள் | – | அ.சா.1 28.04.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br><br>அ.சா.2 15.05.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br><br>அ.சா.3 24.06.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை |
| எதிரியிடம் BNSS பிரிவு 351(1)(ஆ)ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள் | – | 03.07.2026 |
| எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கு.வி.மு.ச. பிரிவு 311 பிரிவின் படியான மனுக்கள் | – | இல்லை. |
| அரசு தரப்பு வழக்கறிஞர் | – | திருமதி.P.பெத்துரதி, M.B,.A., B.L., |
| எதிரி தரப்பு வழக்கறிஞர் | – | திரு.P.வடிவேல், B.A., B.L,, |
| எதிரியின் கூற்று | – | எதிரி குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார்கள். |
| நீதிமன்றத்தின் முடிவு | – | முடிவாக, இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கு சம்பவத்தை குறித்து தெளிவான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக தீர்மானித்து, எதிரி மீது 4(1)(C) TNP Amendment Act 2024–ன் கீழான, குற்றத்திற்கு குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, எதிரியை BNSS பிரிவு 271(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.<br><br>மேலும் இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. |

இவ்வழக்கானது 04.09.2025 ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு

எடுக்கப்பட்டு, என் முன்பாக 03.07.2026-ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 திருமதி.P.பெத்துரதி, MBA., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.P.வடிவேல், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்தும், ஆவணங்களை ஆராய்ந்தும், இறுதி பரிசீலனைக்குப் பின் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.........

**தீர்ப்புரை**

இவ்வழக்கு கடந்த 11.05.2025ம் தேதி 10.15 மணிக்கு எதிரி மம்சாபுரம் கருக்குத்தோப்பு பண்ணை அருகில் வைத்து ஒரு பனைமரத்திலிருந்து 5 லிட்டர் நீல நிற பிளாஸ்டிக் குடத்தில் சுமார் 3 லிட்டர் அளவுள்ள அரசால் தடை செய்யப்பட்ட பனங்கள் இறக்கிய குற்றத்திற்காக எதிரி மீது 4 (1)(C) TNP Amendment Act 2024–ன் கீழ் தண்டிக்கத்தக்கவர் என்று மம்சாபுரம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்கள் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையானபோது, எதிரிக்கு அரசு தரப்பில் தாக்கலான ஆவணங்களின் நகல்கள் யாவும் BNSS பிரிவு 230ன் படி இலவசமாக வழங்கப்பட்டு, குற்றம் குறித்து வினவியபோது பொய் வழக்கு, குற்றவாளி இல்லை என்றார். போதிய கால அவகாசத்திற்கு பிறகு எதிரி மீது பிரிவு 4 (1)(C) TNP Amendment Act 2024–ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவியபோது எதிரி பொய் வழக்கு, தான் குற்றவாளி இல்லை என மறுத்தார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

3) அரசு தரப்பில் அசா.1 முதல் அசா.3 சாட்சிகள் விசாரணை செய்து, அ.சாஆ.1 மற்றும் அ.சாஆ.2 சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

<u>4) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:–</u>

4-(1) அ.சா.1 திரு.ராமச்சந்திரன் தனது சாட்சியத்தில், தான் தற்போது மம்சாபுரம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 11.05.2025 ம் தேதி காலை 10.15 மணிக்கு சார்பு ஆய்வாளர் பாரதிராஜா அவர்களுடன் தானும், தலைமை காவலர் 1307 சகாதேவன் அவர்களும் மதுவிலக்கு குற்றங்கள் சம்பந்தமாக ரோந்து சென்று போது கருக்குதோப்பு பண்ணை அருகில் பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த டெப்பை கணபதி நாடார் தெருவைச் சேர்ந்த அழகு மகன் செல்வராஜ், வயது 25 என்பவர் பனைமரத்திலிருந்து 5 லிட்டர் நீல நிற பிளாஸ்டிக் குடத்துடன் இறங்கி கொண்டிருந்தவரை சுற்றி வளைத்து நிறுத்தி குடத்தை சோதனை செய்து பார்த்த போது அதில் சுமார் 3 லிட்டர் அளவு கொண்ட புளித்த வாடையுடன் கூடிய பனங்கள் இருந்தது என்றும், அரசால் தடை செய்யப்பட்ட பனங்கள் இறக்கிய குற்றத்திற்கு எதிரியை கைது செய்து பனங்கள்ளை கைப்பற்றி சம்பவ இடத்திலேயே கொட்டி அழித்து, குடத்தை உடைத்து, எதிரியை நிலையம் கொண்டு செல்ல தயாரிக்கலான அத்தாட்சியில் தனிநபர்கள் யாரும் இல்லாததால் போலீஸ் பார்ட்டிகளாகிய தாங்களே கையொப்பம் இட்டு எதிரியை காலை 11.15 மணிக்கு நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளர் அவர்களுக்கு உதவியாக இருந்ததாகவும், சார்பு ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும், தன்னிடம் காட்டப்படும் அத்தாட்சியிலுள்ள இரண்டாவது கையெழுத்து தன்னுடையது தான் அ.சா.ஆ.1 என்று சாட்சியம் அளித்துள்ளார்.

4-(2) அ.சா.2 திரு.பாரதிராஜா தனது சாட்சியத்தில், தான் தற்போது தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் உட்கோட்டம் பனவடலிசத்திரம் காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 11.05.2025 அன்று மம்சாபுரம் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது அன்று காலை 09.00 மணிக்கு தானும், முதல்நிலை காவலர் 1309 சகாதேவன் மற்றும் முதல்நிலை காவலர் 3275 ராமச்சந்திரன் ஆகிய போலீஸ்பார்ட்டி சகிதம் மம்சாபுரம் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மதுவிலக்கு குற்றம் சம்மந்தமாக ரோந்து சுற்றி வரும்போது அழகு மகன் செல்வராஜ் வயது 25 டெப்பை கணபதி நாடார்தெரு

மம்சாபுரம் என்பவர் 10.15 மணிக்கு கருக்கு தோப்பு பகுதியில் ஒரு பனைமரத்திலிருந்து 5 லிட்டர் நீல நிற பிளாஸ்டிக் குடத்துடன் இறங்கிக்கொண்டிருந்தவரை சுற்றி வளைத்து நிறுத்தி அவர் வைத்திருந்த பிளாஸ்டிக் குடத்தை சோனை செய்தபோது அதில் சுமார் 3 லிட்டர் புளித்த வாடையுடன் கூடிய அரசால் தடை செய்யப்பட்ட பனங்கள் இருந்தது தெரியவந்தது என்றும், மேற்படி குற்றத்திற்கு எதிரி செல்வராஜ்ஜை கைது செய்தும் குடத்துடன் பனங்கள்ளை சம்பவயிடத்தில் அழித்தும் சம்பவயிடத்தில் தனிநபர்கள் யாரும் இல்லாததால் போலீஸ் பார்ட்டியாகிய தாங்களே அத்தாட்சி தயார் செய்து 11.15 மணிக்கு நிலையம் கொண்டுவந்து குற்ற எண்.99/2025 பிரிவு.4(1)(C) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்ததாகவும், முதல் தகவல் அறிக்கை அசாஆ.2 என்றும், அன்று 11.15 மணிக்கு இவ்வழக்கில் தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகள் முதல் நிலை காவலர் 1309 சகாதேவன் மற்றும் முதல்நிலை காவலர் 3275 ராமச்சந்திரன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், எதிரி மீது அரசு அனுமதியின்றி பனங்கள் இறக்கிய குற்றத்திற்கு 11.05.2025 அன்று குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

4-(3) அ.சா.3 திரு.சகாதேவன் தனது சாட்சியத்தில், தான் தற்போது மம்சாபுரம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 11.05.2025 ம் தேதி காலை 10.15 மணிக்கு சார்பு ஆய்வாளர் பாரதிராஜா அவர்களுடன் தானும், தலைமை காவலர் 3275 ராமச்சந்திரன் அவர்களும் மதுவிலக்கு குற்றங்கள் சம்பந்தமாக ரோந்து சென்று போது கருக்குதோப்பு பண்ணை அருகில் பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த டெப்பை கணபதி நாடார் தெருவைச் சேர்ந்த அழகு மகன் செல்வராஜ், வயது 25 என்பவர் பனைமரத்திலிருந்து 5 லிட்டர் நீல நிற பிளாஸ்டிக் குடத்துடன் இறங்கி கொண்டிருந்தவரை சுற்றி வளைத்து நிறுத்தி குடத்தை சோதனை செய்து பார்த்த போது அதில் சுமார் 3 லிட்டர் அளவு கொண்ட புளித்த வாடையுடன் கூடிய பனங்கள் இருந்தது என்றும், அரசால் தடை செய்யப்பட்ட பனங்கள் இறக்கிய குற்றத்திற்கு எதிரியை கைது செய்து பனங்கள்ளை கைப்பற்றி

சம்பவ இடத்திலேயே கொட்டி அழித்து, குடத்தை உடைத்து, எதிரியை நிலையம் கொண்டு செல்ல தயாரிக்கலான அத்தாட்சியில் தனிநபர்கள் யாரும் இல்லாததால் போலீஸ் பார்ட்டிகளாகிய தாங்களே கையொப்பம் இட்டு எதிரியை காலை 11.15 மணிக்கு நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளர் அவர்களுக்கு உதவியாக இருந்ததாகவும், சார்பு ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும், அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள அத்தாட்சியிலுள்ள முதலாவது கையெழுத்து தன்னுடையது தான் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

5) இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டு, எதிரிக்கு எதிராக தோன்றிய அரசு தரப்பு சாட்சிய சங்கதிகளை தொகுத்து எதிரியிடம் BNSS பிரிவு 351(1)(ஆ)–ன் படி வினவியபோது எதிரி சாட்சியை பொய் எனக் கூறி மறுத்தார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என சொன்னார். இவ்வழக்கில் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6) <u>தீர்வுக்குரிய பிரச்சனை :–</u>

அரசு தரப்பால் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

7) கடந்த கடந்த 11.05.2025ம் தேதி 10.15 மணிக்கு எதிரி மம்சாபுரம் கருக்குத்தோப்பு பண்ணை அருகில் வைத்து ஒரு பனைமரத்திலிருந்து 5 லிட்டர் நீல நிற பிளாஸ்டிக் குடத்தில் சுமார் 3 லிட்டர் அளவுள்ள அரசால் தடை செய்யப்பட்ட பனங்கள் இறக்கினார் என்பதே அரசு தரப்பு வழக்காகும்.

8. அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும்போது, அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவரும் எவ்வித முரண்பாடுகளும் இன்றி தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், எனவே எதிரியை தண்டிக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

9. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், பொதுவாக பதநீர் நேரம் கடந்தால் பனங்கள்ளாக மாறிவிடும் என்றும், இவ்வழக்கில் சம்பவம் இடம் தொடர்பான பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றும், இவ்வழக்கில் ஒரே காவல் அதிகாரி தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து இவ்வழக்கு விசாரணையையும் மேற்கொண்டதாகவும், இவ்வழக்கு சொத்தை தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின் பிரிவு 32(C)–ன் கீழ் கொடுக்கப்பட்ட வகையங்களின் படி அழிக்கப்படவில்லை என்றும், இவ்வழக்கானது புள்ளி விபரத்திற்காக எதிரி மீது போடப்பட்டுள்ளதாகவும், அதனால் இவ்வழக்கின் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட வில்லை என்றும், எனவே எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

10. அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 11.05.2025ம் தேதி காலை 10.15 மணிக்கு சார்பு ஆய்வாளர் பாரதிராஜா அவர்களுடன், தானும், தலைமைக் காவலர் சகாதேவன் ஆகியோருடன் மதுவிலக்கு குற்ற தடுப்பு சம்பந்தமாக ரோந்து சென்ற போது கருக்கு தோப்பு பண்ணை அருகில் செல்வராஜ் என்பவர் பனைமரத்திலிருந்து 5 லிட்டர் நீல நிற பிளாஸ்டிக் குடத்துடன் இறங்கி கொண்டிருந்தவரை சுற்றி வளைத்து நிறுத்தி குடத்தை சோதனை செய்த போது அதில் 3 லிட்டர் புளித்த வாடையுடன் கூடிய பனங்கள் இருந்ததாகவும், அரசால் தடை செய்யப்பட்ட பனங்கள் இறக்கிய குற்றதிற்காக எதிரியை கைது செய்து பனங்கள்ளை சம்பவ இடத்திலேயே கொட்டி அழித்து, குடத்தை உடைத்தும், எதிரியை நிலையம் கொண்டு செல்ல தயாரிக்கலான அத்தாட்சியில் தனிநபர்கள் யாரும் இல்லாததால், போலீஸ் பார்ட்டிகளாகிய தாங்களே சாட்சிகளாக கையெழுத்து செய்ததாகவும், அன்று காலை 11.15 மணி அளவில் எதிரியை நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்வதற்கு சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்ததாகவும், சார்பு ஆய்வாளர் தன்னை விசாரித்ததாகவும், அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையெழுத்து தன்னுடையது தான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

11. மேலும் தனது குறுக்கு விசாரணையில், மேற்படி கருக்குதோப்பு பண்ணை அருகில் உள்ள பகுதிகளில் 1000 த்திற்கு மேற்பட்ட பனை மரங்கள் உள்ளதாகவும் எதிரி குறிப்பாக எந்த மரத்திலிருந்து இறங்கினார் என்பது குறிப்பிடப்படவில்லை என்றும், சம்பவம் நடந்ததாக கூறப்படும் மரத்தினை குறிப்பிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், எதிரியை கைது செய்த போது பனைமரம் ஏறுவதற்கு பயன்படுத்தும் அரிவாள், கால்தலை, கம்பு போன்றவை கைப்பற்றப்படவில்லை என்றும், மேற்படி எதிரியிடம் கைப்பற்றியதாக கூறப்படும் பானமானது பனங்கள் என்று கண்டுபிடிப்பதற்கு தான் சிறப்பு பயிற்சிகள் எதுவும் எடுக்கவில்லை என்றும், தாங்கள் கைப்பற்றியதாக கூறப்படும் குடத்தினை புகைப்படம் எடுக்கவில்லை என்றும், மேற்படி கைப்பற்றியதாக கூறப்படும் சொத்துக்களை காவல் ஆய்வாளர் சொன்னதன் பேரில் அழித்ததாகவும், மேற்படி கருக்குதோப்பு பண்ணையில் சுமார் 50 குடும்பங்கள் வீடு அமைத்து வாழ்ந்து வருவதாகவும், எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றும், சார்பு ஆய்வாளர் எதிரியிடமிருந்த குடத்தை மட்டும் தான் வாங்கி சோதனையிட்டதாகவும், காவல் ஆய்வாளரின் உத்தரவின் பேரில் சம்பவயிடத்திலேயே எதிரியிடம் கைப்பற்றப்பட்ட பனங்கள்ளை அழித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

12. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.2 தனது சாட்சியத்தில், கடந்த 11.05.2025 அன்று மம்சாபுரம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த போது காலை 09.00 மணி அளவில் அ.சா.1 மற்றும் அ.சா.2 உடன் மம்சாபுரம் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மதுவிலக்கு குற்றம் சம்பந்தமாக ரோந்து சுற்றி வந்த போது செல்வராஜ் என்பவர் மம்சாபுரம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கருக்கு தோப்பு பகுதியில் ஒரு பனை மரத்திலிருந்து 5 லிட்டர் நீல நிற பிளாஸ்டிக் குடத்துடன் இறங்கி கொண்டிருந்த வரை, சுற்றி வளைத்து நிறுத்தி அவர் வைத்திருந்த பிளாஸ்டிக் குடத்தை சோதனை செய்ததில், மேற்படி குடத்தில் சுமார் 3 லிட்டர் புளித்த வாடையுடன் கூடிய அரசால் தடை செய்யப்பட்ட பனங்கள் இருந்ததாகவும், மேற்படி குற்றத்திற்காக செல்வராஜ்ஜை கைது செய்து

குடத்துடன் பனங்கள்ளை சம்பவ இடத்தில் அழித்ததாகவும், சம்பவ இடத்தில் தனிநபர்கள் யாரும் இல்லாததால், போலீஸ் பார்ட்டிகளாகிய தாங்களே அத்தாட்சி தயார் செய்து 11.15 மணிக்கு நிலையம் கொண்டு வந்து எதிரி மீது குற்ற எண்.99/2025 பிரிவு 4(1)(C) TNP Act– ன் கீழ் வழக்கு பதிவு செய்ததாகவும், சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், எதிரி மீது 11.05.2025 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

13. மேலும் தனது குறுக்கு விசாரணையில், கருக்குதோப்பு பண்ணையை சுற்றி சுமார் 1000 க்கும் மேல் பனைமரங்கள் இருக்கும் என்றும் கருக்குதோப்பு பண்ணையில் சுமார் 15 குடும்பங்கள் வாழ்ந்து வருவதாகவும், எதிரி எந்த பனை மரத்தில் ஏறினார் என்பதை குறிப்பிட்டு வரைபடம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றும், மேற்படி சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடமானது ஆண்டாள் கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்றும், பதநீரானது நேரம் கடந்துவிட்டால் புளித்த வாடை அடிக்குமா என்று தனக்கு தெரியாது என்றும், தான் பனங்கள்ளை கண்டுபிடிப்பதற்கு சிறப்பு பயிற்சிகள் எதுவும் தான் படிக்கவில்லை என்றும், எதிரி பனங்கள் இறக்கியதாக கூறப்படும் இடத்தின் உரிமையாளர் யாரும் தங்களிடம் எதிரி மீது புகார் எதுவும் கொடுக்கப்படவில்லை என்றும், மேற்படி பனங்கள்ளை கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், எதிரியை சோதனை செய்தவற்கு முன் எதிரியிடமோ, அல்லது நீதிமன்றத்திலோ அனுமதி கடிதம் பெறவில்லை என்றும், கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் பனங்கள்ளின் மாதிரிகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், மேற்படி பனங்கள்ளை கீழே கொட்டி அழித்த போதும், குடத்தை உடைத்த போதும் புகைப்படம் எடுக்கப்பட வில்லை என்றும், இவ்வழக்கின் சொத்துக்களை அழித்ததற்கான அழித்தல் மகஜர் தயார் செய்யப்படவில்லை என்றும், இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்ற இறுதி அறிக்கை தன்னால் தயார் செய்யப்பட்டதாகவும், முதல் தகவல்

அறிக்கை மற்றும் குற்ற இறுதி அறிக்கை ஒரே நாளில் தயார் செய்யப்பட்டது, என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

14. அ.சா.3 தனது சாட்சியத்தில், கடந்த 11.05.2025ம் தேதி காலை 10.15 மணிக்கு சார்பு ஆய்வாளர் பாரதிராஜா அவர்களுடன், தானும், அ.சா.1 ஆகியோருடன் மதுவிலக்கு குற்ற தடுப்பு சம்பந்தமாக ரோந்து சென்ற போது, கருக்குதோப்பு பண்ணை அருகில் செல்வராஜ் என்பவர் பனைமரத்திலிருந்து 5 லிட்டர் நீல நிற பிளாஸ்டிக் குடத்துடன் இறங்கி கொண்டிருந்தவரை சுற்றி வளைத்து நிறுத்தி குடத்தை சோதனை செய்த போது அதில் 3 லிட்டர் புளித்த வாடையுடன் கூடிய பனங்கள் இருந்ததாகவும், அரசால் தடை செய்யப்பட்ட பனங்கள் இறக்கிய குற்றதிற்காக எதிரியை கைது செய்து பனங்கள்ளை சம்பவ இடத்திலேயே கொட்டி அழித்து, குடத்தை உடைத்தும், எதிரியை நிலையம் கொண்டு செல்ல தயாரிக்கலான அத்தாட்சியில் தனிநபர்கள் யாரும் இல்லாததால், போலீஸ் பார்ட்டிகளாகிய தாங்களே சாட்சிகளாக கையெழுத்து செய்ததாகவும், அன்று காலை 11.15 மணி அளவில் எதிரியை நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்வதற்கு சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்ததாகவும், சார்பு ஆய்வாளர் தன்னை விசாரித்ததாகவும், அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்து தன்னுடையது தான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

13. மேலும் தனது குறுக்கு விசாரணையில், கருக்குதோப்பு பண்ணை அருகில் உள்ள பகுதிகளில் 1000த்திற்கும் மேற்பட்ட பனை மரங்கள் உள்ளதாகவும் எதிரி குறிப்பாக எந்த மரத்திலிருந்து பனங்கள் இறங்கினார் என்பது குறிப்பிடப்படவில்லை என்றும், சம்பவம் நடந்ததாக கூறப்படும் மரத்தினை குறிப்பிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், எதிரியை கைது செய்த போது பனைமரம் ஏறுவதற்கு பயன்படுத்தும் அரிவாள், கால்தலை, கம்பு போன்றவை கைப்பற்றப்படவில்லை என்றும், மேற்படி எதிரியிடம் கைப்பற்றியதாக கூறப்படும் பானமானது பனங்கள் என்று கண்டுபிடிப்பதற்கு தான் சிறப்பு பயிற்சிகள் எதுவும்

எடுக்கவில்லை என்றும், தாங்கள் கைப்பற்றியதாக கூறப்படும் குடத்தினை புகைப்படம் எடுக்கப்படவில்லை என்றும், மேற்படி கைப்பற்றியதாக கூறப்படும் சொத்துக்களை சார்பு ஆய்வாளர் சொன்னதன் பேரில் அழித்ததாகவும், மேற்படி கருக்கு தோப்பு பண்ணையில் சுமார் 50 குடும்பங்கள் வீடு அமைத்து வாழ்ந்து வருவதாகவும், எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றும், சார்பு ஆய்வாளர் எதிரியிடமிருந்த குடத்தை மட்டும் தான் வாங்கி சோதனையிட்டதாகவும், காவல் ஆய்வாளரின் உத்தரவின் பேரில் சம்பவயிடத்திலேயே எதிரியிடம் கைப்பற்றப்பட்ட பனங்கள்ளை அழித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

16. மேற்படி சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை ஆராய்ந்ததிலிருந்து, அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகிய சாட்சிகள் இவ்வழக்கில் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றும், எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றும், எதிரி பனங்கள் இறக்கியதாக கூறப்படும் பனைமரத்தை குறிப்பிட்டு கூறமுடியாது என்றும், பனங்கள்ளின் புளித்த வாடையை கண்டுபிடிப்பதற்கு தாங்கள் சிறப்பான பயிற்சி எதுவும் மேற்கொள்ளவில்லை என்றும், பனங்கள்ளை கொட்டி அழிக்கும் பொழுதும், குடத்தை உடைக்கும் பொழுதும் புகைப்படம் எடுக்கப்படவில்லை என்றும் ஒப்புக்கொண்டுள்ளனர். மேலும் மேற்படி பனங்கள்ளின் மாதிரிகள் எடுக்கப்படவில்லை என்றும், அதனை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.3 ஒப்புக்கொண்டுள்ளார்.

17. பொதுவாக குற்றவியல் வழக்குகளில் குற்றம் நடந்த இடத்தை விசாரணை அதிகாரி பார்வையிட்டு அங்குள்ள சூழ்நிலைகளையும் கைப்பற்றப்பட்ட பொருட்களையும் ஆவணப்படுத்துவது புலன் விசாரணை அதிகாரியின் அடிப்படை கடமையாகும். அதுமட்டுமின்றி பார்வை மகஜர் மற்றும் வரைபடம் ஆகியவை சம்பவயிடத்தை பற்றிய முக்கியமான பதிவாகும். மேலும் மற்ற சாட்சிகளின் சாட்சியங்களை உறுதிப்படுத்தவும் அவை முக்கியமான ஆவணங்களாக

விளங்குகிறது. ஆனால் இவ்வழக்கில் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யப்படாதது இவ்வழக்கு சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடம் குறித்த நியாயமான சந்தேகத்தை இந்நீதிமன்றத்திற்கு ஏற்படுத்துகிறது.

18. தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் 1937 சட்ட பிரிவு 32 (C)–ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள வரைமுறையின்படி கள், வாஷ் அல்லது சொண்டிசோரு, ஆகியவை இப்பிரிவின் கீழ் ஒரு அலுவலர் அல்லது நபரால் கைப்பற்றப்பட்டால் அந்த அலுவலர் அல்லது நபர் அவற்றை கண்ட அந்த இடத்திலேயே அழித்துவிட்டு பின்னர் அத்தகையை கள், வாஷ் அல்லது சொண்டிசோரு வைக்கப்பட்டிருந்த பானைகள் அல்லது வேறு கொள்கலன்கள் ஆகியவற்றை காவல் ஆய்வாளர் அல்லது மதுவிலக்கு அலுவலர் அல்லது அந்த வழக்கை விசாரணை செய்வதற்கு ஆள்வரை கொண்டுள்ள குற்றவியல் நீதித்துறை நடுவர் ஆகியவருக்கு அனுப்பி வைக்க வேண்டும். ஆனால் இவ்வழக்கில் அவ்வாறு பனங்கள் இருந்ததாக கூறப்படும் குடம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. மாறாக சம்பவ இடத்திலேயே மேற்படி குடத்தை உடைத்து அழித்துவிட்டதாக சாட்சிகளால் கூறப்பட்டுள்ளது.

19. மேலும் இவ்வழக்கில் தனிநபர் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. அதுமட்டுமின்றி சம்பவ இடத்தில் பல குடும்பங்கள் வசித்து வந்ததாக கூறப்பட்டுள்ள போதும் அவர்கள் யாரிடமும் சாட்சியாக அத்தாட்சியில் கையெழுத்து பெறப்படவில்லை என்பதை இவ்வழக்கின் சாட்சிகள் ஒப்புக்கொண்டுள்ளார். மேலும் போலீஸ் பார்ட்டிகளே அத்தாட்சியில் கையெழுத்து செய்துள்ளனர். இவ்வழக்கின் சம்பவம் நடந்த 11.05.2025 அன்றே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு 02.08.2025 அன்று தான் நீதிமன்றத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளது. மேற்படி காலதாமதத்திற்கான தகுந்த விளக்கமும் சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் வெளிப்படவில்லை. அதுமட்டுமின்றி இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பபடுவதற்கு முன்பே எதிரி மீது கடந்த 11.05.2025 அன்றே குற்ற இறுதியறிக்கை தயார் செய்யப்

பட்டுள்ளது. ஆனால் நீதிமன்றத்தில் கடந்த 02.08.2025 அன்று தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களை கருத்தில் கொண்டும், புலன் விசாரணையிலுள்ள குறைபாடுகளை கருத்திற் கொண்டும், வழக்கின் முக்கிய ஆவணங்களான பார்வை மகஜர் மற்றும் வரைபடம் போன்றவற்றை தயார் செய்யப்படாததை கருத்திற் கொண்டும், இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் பனங்கள்ளை மாதிரிகள் எடுக்கப்பட்டு ஆய்விற்கு அனுப்ப தவறியதை கருத்தில் கொண்டும், மேற்படி கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் குடத்தினை புகைப்படம் எடுக்கப்படாததை கருத்தில் கொண்டும், எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலமும் பெறப்படாததை கருத்தில் கொண்டும், இவ்வழக்கில் தனிநபர்கள் யாரையும் சாட்சியாக இவ்வழக்கில் சேர்க்கப்படாததை கருத்தில் கொண்டும், மேலே விவரிக்கப்பட்ட காரணங்களை கருத்திற்கொண்டும் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட வில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி அவரை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்வதே நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

20. முடிவாக, இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கு சம்பவத்தை குறித்து தெளிவான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக தீர்மானித்து, எதிரி மீது 4 (1)(C) TNP Amendment Act 2024–ன் கீழான, குற்றத்திற்கு குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, எதிரியை BNSS பிரிவு 271(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

21. மேலும் இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, 2026-ஆம் ஆண்டு ஜீலை மாதம் 09-ஆம் நாள் இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறியப்

பகரப்பட்டது.

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

நீதித்துறை நடுவர் எண்.II,
திருவில்லிபுத்தூர்.

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>**

அ.சா.1 திரு.ராமச்சந்திரன்

அ.சா.2 திரு.பாரதிராஜா

அ.சா.3 திரு.சகாதேவன்

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

அ.சா.ஆ.1 – அத்தாட்சி

அ.சா.ஆ.2 – முதல் தகவல் அறிக்கை

**<u>அரசு தரப்பு சான்றுப் பொருள்</u>** – இல்லை

**<u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** - இல்லை

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

நீதித்துறை நடுவர் எண்.II,
திருவில்லிபுத்தூர்.

| | |
|---|---|
| 1. | எந்த சாட்சியும் 3 முறைக்கு மேல் நிறுத்தப்படவில்லை. |
| 2. | வழக்கின் முடிவு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது. |
| 3. | நடுவர் தீர்ப்புரையின் அனைத்து பக்கங்களிலும் கையொப்பமிட்டுள்ளார். |
| 4. | இவ்வழக்கில் வழக்குச் சொத்து தாக்கல் செய்யப்படவில்லை. |
| 5. | வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார். |